


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,
கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வயிற்றுப்போக்கு மற்றும் காய்ச்சல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு முகாமில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து சுகாதாரத்துறை, ஊட்டச்சத்துத்துறை, சமுதாயநலத்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் கல்வித்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (08.07.2016) நடைபெற்றது.
துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. மதுசூதனன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 428/2016 நாள்: 08.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தலைமையில், வயிற்றுப்போக்கு மற்றும் காய்ச்சல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு முகாமில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஒருங்கிணைப்புக்கூட்டம் இன்று (08.07.2016) நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தை கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரதுறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள், மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு வருடத்திற்கு மூன்று முறையாவது வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, அதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை சுகாதாரதுறை அலுவலர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, இதனை பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், விழிப்புணர்வு முகாம் 11.07.2016 முதல் 23.07.2016 வரை (15 நாட்கள்) நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வயிற்றுப்போக்கு மற்றும் காய்ச்சல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு முகாமில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து சுகாதாரத்துறை, ஊட்டச்சத்துத்துறை, சமுதாயநலத்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் கல்வித்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (08.07.2016) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுபோக்கு மற்றும் காய்ச்சல் தடுப்பதற்காக சுகாதாரதுறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 11.07.2016 முதல் 23.07.2016 வரை (15 நாட்கள்) விழிப்புணர்வு முகாம்கள் நடத்தபடவுள்ளது. இந்த முகாமில் முதல் வாரத்தில் குழந்தைகள் உயிர் காக்கும் கரைசல் மற்றும் துத்தநாக மாத்திரைகள் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கு வழங்கப்பட உள்ளது எனவும், இரண்டாவது வாரத்தில் தாய்ப்பால் ஊட்டும் முகாம்கள் நடத்தப்பட்டு, தாய்ப்பால் ஊட்டும் அறைகளில் விழிப்புணர்வுடன் கூடிய உடல்நலக் கல்வி தாய்மார்களுக்கு வழங்கப்பட உள்ளது எனவும், இப்பணியில் நமது மாவட்டத்தில் சுகாதாரத்துறை மற்றும் ஊட்டச்சத்துத்துறையைச் சார்ந்த சுமார் 1500 பேர் ஈடுபடுத்தப்பட உள்ளனர். 5 வயதுக்குட்பட்ட 1,45,000 குழந்தைகளுக்கு தேவையான மருந்து, மாத்திரைகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சுகாதாரத்துறை மற்றும் ஊட்டச்சத்துத்துறை பணியாளர்கள் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் உள்ள வீடுகளுக்குச் சென்று உயிர் காக்கும் கரைசல் மற்றும் துத்தநாக மாத்திரைகள் வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில் வட்டார அளவிலும், ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலைய அளவிலும், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து துறை சார்ந்த அனைத்து பணியாளர்களுக்கும் ஏற்கெனவே பயிற்சி வழங்கப்பட்டுள்ளது எனவும், தன் சுத்தம் பேணப்பட்டால் வயிற்றுப்போக்கு ஏற்படுவதைக் குறைக்கலாம் என்பதை கருத்தில் கொண்டு இப்பழக்கத்தை மாணவ, மாணவியரிடையே ஊக்குவிக்கும் பொருட்டு சுகாதாரத்துறையும், கல்வித்துறையும் இணைந்து கைகழுவும் முறை பற்றி இந்த 15 நாட்களில் செயல் விளக்கம் அளிக்க சம்பந்தபட்ட அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. மதுசூதனன், மரு. ரவிகுமார், ஆசாரிப்பள்ளம் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை உறைவிட மருத்துவர் மரு. மேரி விஜயா, ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. கி. பேச்சியம்மாள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி. கே.எஸ். ராணி, குடிநீர் வடிகால் வாரிய உதவி நிர்வாகப் பொறியாளர் பொறி. வ. கோபால கிருஷ்ணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு. பி. சொக்கலிங்கம், நாகர்கோவில் மாவட்ட கல்வி அலுவலர் திரு. எஸ். ஜாண் பெர்க்மான்ஸ், உதவி திட்ட மருத்துவ அலுவலர் மரு. மாதவன்பிள்ளை, குழித்துறை நகராட்சி சுகாதார அலுவலர் திரு. ஜா. டெல்விஸ்ராய், குளச்சல் நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு. ரா. மாதவ ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.